சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத „ „ 4-50
3 மாத „ „ 2-25
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

சிந்தித்துப்பார்க்காமல் பேசுவது குறி பார்க்காமல் சுடுவது போன்றது.
— கார்லீட் —

94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 41-ம் இல.

# பாப்பரசரின் மேலதிகாரத்தைத் தாக்குபவர் திருச்சபையை தாக்குகிறுர்

சமய போதனைகளில் பாப்பரசருக்கு விளக்கங்கள்கொடுக்க 6-வது சின்னப்ப பாப்பரசர் நியமித்த பெயர்பெற்ற 30 வேதபோதகவிற்பன்னர் அடங்கிய குழுவினரின் முதற்கூட்டத்தில் பரிசுத்த தந்தை அவர்களுக்கு அளித்த பேருரையில் வேதபோதகனைகளுக்கும், கிறீஸ்துநாதரால் பேதுருவானவருக்கும் அவரைப் பின்தொடரும் பாப்புமாருக்கும் அளிக்கப்பட்ட மேலதிகாரத்துக்கும் ஒருவித முரண்பாடும் இருக்க முடியாதென்றும் பாப்பரசரின் மேலதிகாரத்தைத் தாக்குபவர்கள் திருச்சபையின் அடிஅத்திவாரத்தையே தாக்குபவராவர் எனவும் கண்டிப்பாகக் கூறினுர். மேலும் அவர் ஆற்றிய உரையில் குழுவினரைப் பாரபட்சமின்றியும் ஒழிப்புமறைப் பின்றியும் தேவனின் முன்னிலையில் ஆராயப்படும் விஷயங்களைப் பற்றித் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார்.

## மத். கிழக்கு வெளி விவகார மந்திரிமார்

### வத்திக்கானுக்கு விரைந்தனர்

சென்றவாரம் 6-வது சின்னப்ப பாப்பரசரைக் காண விரும்பி மத்தியகிழக்குநாட்டு வெளிவிவகார மந்திரிமார் மூவர் வத்திக்கான் சென்று திரும்பினர். அவர்கள் லெபனன், ஜோர்டான், இஸ்ருயேல்தேச மந்திரிமாராம். 1952-ம் ஆண்டுக்குப்பின் இஸ்ருயேல்தேச வெளிவிவகார மந்திரி வத்திக்கானில் பாப்பரசரைச் சந்தித்தது இதுவே முதல்முறையாகும். இஸ்ருயேல்தேச வெளிநாட்டு விவகார மந்திரியாகிய இபான் அவர்கள் பாப்பரசருடன் ஒருமணித்தியாலநேரமாக அவரது வாசிகசாலை அறையொன்றில் சம்பாஷித்தார். இஸ்ருயேல்தேச அரசாங்கம் மத்தியகிழக்குப் பிரதேசத்தில் சமாதானத்தை நிலைநாட்ட எடுக்கும் முயற்சிகளை திரு. இபான்கூற பாப்பரசர் அவதானமாகச் செவிசாய்த்தார் என்று செய்திகள் கூறுகின்றன.

## காந்தி நூற்ருண்டு விழாவன்று பாப்பரசர் அனுப்பிய செய்தி

மகாத்மா காந்திஜியின் ஜனனதின நூற்ருண்டு நிறைவு விழாவன்று இந்திய ஜனதிபதி திரு. வி. வி. கிரிஅவர்களுக்குப் பரிசுத்ததந்தை மகாத்மாகாந்தியின்மேல் தமக்குள்ள அன்பையும் மதிப்பையும் குறித்து அவர் இந்தியாவுக்கும், அகில உலகத்துக்கும் எடுத்து வற்புறுத்திய உண்மைகள் மக்கள் மனதில் என்றும் நிலைகொள்ள வேண்டுமெனும் தமது தணியாத ஆசையை எடுத்துக்கூறியிருக்கிறுர். மகாத்மா காந்தியைப்போல் பல்வேறு தேசங்களிலும் உண்மையான பெருந்தலைவர்கள் தோன்றத் தேவன் கிருபைகூர வேண்டுமென்பதே பரிசுத்த தந்தையின் பேரவா.

வத்திக்கானில்

## மேற்றிராணிமாரின் சினொட்

இம்மாதம் 11-ந் தேதி வத்திக்கானில் ஆரம்பமாகிய மேற்றிராணிமாரின் சினொட் உலக கவனத்தைப்பெற்றுவருகின்றது. சினொட் ஆரம்பமாகுமுன் பற்பல தேசங்களிலுமுள்ள திருச்சபை அதிகாரிகள் இந்தச் சினொட்டின் நோக்கத்தை விசுவாசிகளுக்கும் பிறருக்கும் வெளிப்படுத்தி அவர்களது செபத்தையும் ஒத்துழைப்பையும் வேண்டிக்கொண்டனர். வத்திக்கான் சங்கத்துக்குப் பின் பாப்பரசரது அதிகாரத்தில் மறுமேற்றிராணிமாருக்குள்ள கூட்டுப் பொறுப்புப்பற்றி ஏற்பட்ட தப்பபிப்பிராயங்களை அம்பலப்படுத்தி அவற்றைச் சரியானமுறையில் விளக்கி வைப்பதே இந்தச் சினொட்டின் முக்கிய நோக்கமாகும். சில முன்தங்கிய நாடுகளிலுள்ள திருச்சபையினர், பிரதேச திருச்சபை அதிகாரிகளுக்கு முன்னிலும் கூடிய அதிகாரங்கள் திட்டவட்டமாகக் குறிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றனர். ஆனுல் ஆசியா, ஆபிரிக்கா, தென்னமெரிக்கா பிரதேச திருச்சபைகள் பெரும்பாலும் முன்போலவே அதிகாரமிருந்து வருவதை விரும்புகின்றன. தத்தம் கோட்பாடுகளை மிக ஆர்வத்துடன் சில மேற்றிராணிமாரும் கருதினுல்மாரும் வெளிப்படுத்தி வருகின்றனர். சில தீவிரவாதிகள் சமயத்தை உபயோகித்து, தத்தம் தீவிரவாத கோட்பாடுகளையும், தத்தம் பெயர்களையும், தாம் கையாளும் முறையற்ற வகைகளினுல் அம்பலப் படுத்தியும் வருகின்றனர்.

## உகண்டாவின் அன்பளிப்புகள்

பரி. தந்தை உகண்டா தேசத்துக்கு இருமாதங்களுக்கு முன் சென்றுதிரும்பியது நேயர்கள் அறிவர். அவர் அங்கு சென்றபோது பல இடங்களிலும் பல அன்பளிப்புகள் செய்யப்பட்டன. அவற்றுட் சில சென்றவாரம் வத்திக்கானில் கிடைக்கப்பெற்றன: அத்தேச ஜனதிபதி உபூட்டோ அவர்கள் உட்பொதிந்த பல பறவைகளும், இருமான் குட்டிகளும் அனுப்பியிருந்தார், உகண்டாதேச 22 வேதசாட்சிகளின் நினைவின்சின்னமாக 22 யானைத் தந்தங்களால் தொகுக்கப்பட்ட அழகிய சின்னம்ஒன்றும் காணப்பட்டது: ஒவ்வொரு தந்தத்திலும் ஒவ்வொரு வேதசாட்சியின் பெயர் வரையப்பட்டிருந்தது:

## பீற்றர்பிள்ளை சுவாமியாரின் ஞாபகத்துக்கு வாசிகசாலைகளே தகுந்தவை

இருவாரங்களுக்கு முன் கொழும்புப் பிரிவிலுள்ள ஜயலா பட்டணத்தில் பீற்றர் பிள்ளை சுவாமியாரின் ஞாபகார்த்தமாக நிறுவப்பெற்ற வாசிகசாலை மிகச் சிறப்புடன் திறந்து வைக்கப்பட்டது. அக்கொண்டாட்டத்துக்குத் தலைமை தாங்கிய வந்தனைக்குரிய பனுனந்த மகா தேரோ அவர்கள் ஆற்றிய உரையில்" பீற்றர் பிள்ளை அடிகளார் இந்நாட்டில் கல்விக்குச் செய்த தொண்டை எடுத்து விளக்கி சுவாமியாரது ஞாபகத்துக்கு அறிவு வளர்ச்சிக்கு மிக அவசியமாயிருக்கும் வாசிகசாலைகளே மிகப் பொருத்தமானவை" எனக் கூறினுர். அக்கூட்டத்தில் பேசியவர்களில் ஒருவராகிய வணக்கத்துக்குரிய ரிசா பாலசூரியர் அடிகள் பீற்றர் பிள்ளை சுவாமியார் ஆரம்பித்துவைத்த சமூக சீர்திருத்தங்கள் எவ்வாறு இன்று தொழிலாளர் வாழ்க்கையை இன்புறுத்துகின்றன என்பதை எடுத்துக் காட்டினுர்.

## மக்களின் ஒழுக்கம் கீழ்த்தரமாகிவிட்டது

இலங்கையில் தாண்டவமாடும் வேலையற்ருேர் பிரச்சினையை அதன் காரணம், நிலைமை, அதற்குப் பரிகாரம் முதலியவற்றை மக்கள் உணரச் செய்வதற்காகச் சென்றவாரம் கொழும்பில் பீற்றர்பிள்ளை சமூகநிலையத்தில் அறிஞர் பலர் இப்பிரச்சினையை அலசி ஆராய்ந்தனர். அப்பெரியாருள் உயர்தர கல்விச் சபைத்தலைவர் திரு. ஜீ. பி. மலாலசேகராவும், கம்யூனிஸ்த கட்சித்தலைவர் திரு. பீற்றர் கெனமனும் இருவராவர். திரு. கெனமன் இந்நாட்டு மக்களின் ஒழுக்கம் நீதி முதலியன வேலையில்லாப் பிரச்சினையினுல் மிகவும் கீழ்த்தரமாகி விட்டதென்றும், இளைஞரை இந்நிலையிலிருந்து மீட்க வாய்ப் பேச்சுக்களை விட்டு அரசாங்கம் செயலில் இறங்கவேண்டுமென்றும் கூறினுர். பட்டதாரிகள் பலஆயிரக்கணக்காக வேலையற்று நாட்டில் அலைந்து திரிகின்றனர். இவர்கள் உணவுக்குத்தன்னும் உழைக்க முடியாதிருப்பது இந்நாட்டுக்கு அவமானமென்ருர் அவர். பட்டதாரிகள் உகந்த வேலைகள்பெற முடியாதிருந்தால் உயர்தர கல்விமுறை தோல்வி அடைந்து விட்டது என்பதே அவரது அபிப்பிராயம். நாட்டின் செல்வம் பயனற்ற உயர்தரக் கல்வி அளிப்பதில் அவம் போகின்றது என்பதே அவரது பேச்சின் சாரம்.

லண்டனில்

## 23-ம் அருளப்பரின் பெயரால் சமூகநிலையம்

லண்டன்நகரில் பொப்லார் என்னும் பிரிவில் 23 ஆம் அருளப்ப பாப்பரசரின் பெயரால் ஒரு சமூகநிலையத்தைச் சென்ற மாதம் கருதினுல் ஹீனன் அடிகள் திறந்துவைத்தார். இன்று சமூகநிலையமாக விளங்கும் கட்டடமானது முன்னர் மாலுமிகள் கிளப்பாக இருந்தது. கத்

[மறுபக்கம் பார்க்க]

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானோபதேசப் பரீட்சை 1969.

### மாதிரி வினா

### (N. P. T. A.)

**5-ம்வகுப்பு :** **நேரம் : 45 நிமிஷம்.**

1. கீறிட்ட இடங்களைப் பொருத்தமான சொல்லைத்து நிரப்புக:

(அ) அவருடைய விலைமதிக்கப்படாத திரு.............. ஸ்துதிக்கப்படுவதாக.

(ஆ) யாவற்றிலும் ............ பேசவேண்டுமென்ற பதே ............ கற்பனையால் விலக்கப்பட்டிருக்கிறது.

(இ) வருடத்தில் ஒருமுறையென்கிலும் ............ ............ பண்ணுவாயாக.

(ஈ) தந்தையே ............ விரோதமாகவும் ............ விரோதமாகவும் பாவத்தைச் செய்தேன்.

2. சரியாயின் √ என்றும், பிழையாயின் × என்றும் குறிப்பிடுக:

(அ) யூதர்கட்குமாத்திரமே கடவுள் கற்பனைகளை அளித்தார் ..........

(ஆ) கோவிலால் செல்லும்போது நடுவில் ஆசாரஞ் செய்வேன் ..........

(இ) கிறிஸ்துவின் படிப்பினைகள் எமது மனச்சாட்சியை வழிநடத்துகின்றன ..........

(ஈ) ஒவ்வொரு சாவானபாவமும் ஞானஸ்நான வெண்ணிற ஆடையைக் கறைப்படுத்துகின்றது ..........

3. பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

(அ) என் மாமிசத்தையுண்டு என் இரத்தத்தைக் குடிப்பவன் நித்தியவாழ்வு அடைகிறான் ..........

(ஆ) யேசுவே! தாவீதின் மகனே! என்பேரில் இரக்கமாயிரும் ..........

(இ) நீயும் யேசுவோடு இருந்தாயோ ..........

(ஈ) இதைஎன் ஞாபகத்துக்காகச் செய்யுங்கள் ..........

4. அடைப்புக்குள்ளிருக்கும் சொற்களுள் பொருத்தமான சொல்லின்கீழ் கோடுக.

(அ) ஞாயிற்றுக்கிழமையில் நாம் செய்யவேண்டிய முதல் கடமை (வயலுழுதல், வீடுவேய்தல், முழுப்பூசை காணல்)

(ஆ) உலகஇரட்சணியம் (மோயிசனல், யேசுவால், யாக்கோப்புவால்) நிறைவேறியது.

(இ) நாம் நற்கருணையில் (யேசுவின் திருச்சரீரத்தை, அப்பத்தை, இரசத்தை)ப் பெறுகின்றோம்.

(ஈ) சாவானபாவஞ் செய்தவர்கள் (உத்தரிப்புஸ்தலம், மோட்சம், நரகம்) அடைகிறார்கள்.

5. பின்வருவனவற்றிற்கு ஒருசொல்லில் விடை எழுதுக.

(அ) யேசுநாதர் தமது முதற்புதுமையை எங்கே செய்தார் ..........

(ஆ) குருப்பட்டம் கொடுக்க அதிகாரம் உடையவர் யார் ..........

(இ) உலகத்தில் மிகத்தீமையானது எது ..........

(ஈ) யேசு சிலுவையைச் சுமக்க உதவிசெய்தவன் யார்?

6. 'அ' பகுதிக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' பகுதியிலிருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அப்பகுதியுடன் இணைத்து எழுதுக.

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| அ. நாம் சோதனைக்கு எதிர்த்து நிற்கும் போது. | [ ] | (1) யேசுநாதர் குணப்படுத்தினர். |
| ஆ. பல ஆண்டுகள் வியாதியாய் இருந்தவனை. | [ ] | (2) கடவுளைப் பிரியப்படுத்தி வெகுமானம் பெறுகின்றோம். |
| இ. கடவுள் தமது சாயலாக. | [ ] | (3) நான் ஒருபோதும் பாவஞ் செய்யேன்; |
| ஈ. தேவரீருடைய உதவியினால்; | [ ] | (4) மனிதனை உண்டாக்கினர். |

7. பின்வருஞ் சொற் கூட்டத்தின் பொருத்தமில்லாத சொல்லைக் கீறிடுக.

(அ) உன் கடமைகளை (மனவேதனையுடன், மனமகிழ்ச்சியுடன், மனத்தாங்கலுடன்செய்)

(ஆ) யேசுவுக்குச் சிலுவை சுமந்துபோக உதவி செய்தவர் (சீமோன், யோசேப்பு, ஏரோது)

(இ) தனது ஆறு சகோதரர்களையும் பாவஞ் செய்யத் தூண்டிய அரசன் (அந்தியோக்கஸ், அகஸ்தஸ், கலிகுலஸ்)

(ஈ) முதல் வேதசாட்சியாக மரித்தவர் (யாகப்பர், முடியப்பர், இராயப்பர்)

8. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வசனத்தில் விடைதருக:

(அ) யேசு கடவுள் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்?

(ஆ) கடைசிநாளில் நடப்பது என்ன?

(இ) மூன்றாவது துக்க தேவஇரகசியம் யாது?

(ஈ) தூயஆவியானவரை எங்கள் ஆன்மாவிலிருந்து அகற்றக்கூடியது என்ன?

# கச்சேரிக்குப் போகிறவழியில்

இடைக்காடு என்ற குக்கிராமம். புண்ணியத்தில் வளர்ச்சியுள்ள கத்தோலிக்க குடும்பம் ஒன்று. இக்குடும்பம் இறைவனின் அன்பும், பிறர்மட்டில் இரக்கமும்கொண்டு உண்மையான கிறிஸ்துவவாழ்வு நடாத்திவந்தது. கல்விப்பகுதியில் கடமையாற்றிக்கொண்டிருந்த அந்தக் குடும்பத்தின் தலைவர் மாசில்லாமணியை அரசாங்கம் மன்னார் மாவட்டத்திற்கு மாற்றம் செய்தது. இதனுல் இவர் குடும்பம் இடைக்காட்டைவிட்டு, மன்னார்ப்பகுதிக்குப் போகலாயிற்று. அங்கே இருக்கும்போது அவரின் மூத்தமகன் சுபாஷ் சிலஅலுவலாக யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வரவேண்டியநிலை அவசியம் ஏற்பட்டது. இந்தச் சுபாஷ் ஒழுக்கம்நிறைந்த கத்தோலிக்கசீவியம் சீவிப்பவர். இந்தவாலிபன் ஒருநாள் புகையிரதமூலம் யாழ்நகர் வந்திறங்கி, ஆஸ்பத்திரி றோட்டு வழியாகக் கச்சேரிக்கு வந்துகொண்டிருந்தான். வந்துகொண்டிருக்கும்பொழுது வழியில்உள்ள புனித அருளப்பர் ஆலயத்திற்கு நாற்றிசையிலும் இருந்து ஆண், பெண், சிறுவர்முதல் முதியோர்வரை ஏராளமான கத்தோலிக்கர் போவதுகண்டு இன்று என்ன திருவிழாவாயிருக்கும் என்று சிந்தித்துக்கொண்டு கோவிலை நோக்கி வெகுவிரைவாக நடந்துபோய் ஆலயத்துள் நுழைந்தார்.

நுழைந்து அவர் பீடத்தை நோக்கியதும், மின்னலால் அடிபட்டதுபோல் திகைத்து, எல்லாம் வல்லஇறைவன் உன்னத மகத்துவ சிம்மாசனத்தில் வீற்றிருப்பதையும், அவர் அங்குள்ள சகலரையும் அன்புடன் நோக்கிக்கொண்டிருப்பதையும், அவர் திருப்பாதத்தடியில் இருந்து நூற்றுக்கணக்கான கிறிஸ்துவர்கள் அவரைப்பார்ப்பதும், அந்த இறைமகன் யேசு பேசும் அன்பின் வார்த்தையைக் கேட்பதும் தங்கள் மன்றாட்டங்கள், நன்றிஉரைகள், அன்பின் பக்திச்செபங்கள், அவர் உலக இரட்சிப்பு அடையப்பட்ட பாடுகளின் விளக்கங்களை அருமையான செபங்களில் இசைத்துத் தொழுதுகொண்டு இருப்பதையும்கண்டு அவர் உள்ளம் அன்பால் பற்றி எரிந்துகொண்டிருந்தது.

தான்வந்த அலுவலைமறந்து கோவிலிலேயே அமர்ந்து யேசுவைப் பார்த்துக்கொண்டு 'ஆ!' தேவன் இந்த யாழ்நகர் வாசிகள்மீது கொண்டுள்ள அன்பே! அன்பு!! 'ஆ!' தேவன் எவ்வளவு நல்லவர்; தனது மக்கள் மத்தியிலிருக்க எவ்வளவு ஆசை; தனது மக்கள் எல்லோரும் தங்கள் ஆசைகள், மன்றாட்டங்கள், நன்றியுள்ள விண்ணப்பங்களைக் கேட்க எவ்வளவு ஆசையுள்ளவராய் இருக்கிறார். யாழ்நகரகத்தோலிக்க மக்களும் இதை நன்றாய்விளங்கிச் சிறுவர்முதல் முதியோர்வரை பகல்நேரங்களில் கூட்டங்கூட்டமாயும், தனிமையாயும், சிநேகிதர்கள் ஒன்றுசேர்ந்தும், பக்திக்கூட்டங்கள் ஒன்றுசேர்ந்தும் இறைமகன் யேசுவைத் தரிசிக்க வருவதைப் பார்ப்பது அவரின் அன்னை [illegible]

உண்மையாகவே யாழ்நகர் புனிதமடையத் தொடங்கிவிட்டது. இன்று முதல் யாழ் மேற்றிராசன கத்தோலிக்கர் இறைவனில் அன்புவைத்து, மரியன்னையுடன் ஒன்றித்துத் தேவனுக்கு நன்றிகூறிக்கொண்டே இருப்பார்கள். இதனுல் யாழ்நகரமக்களும், ஈழநாட்டுமக்களும் அளப்பெரிய நன்மைகளை அடைவார்கள் என்ற எண்ணங்களின் மத்தியில் அசைவற்று உட்கார்ந்திருந்தார்.

இந்த எண்ணங்கள் எழும்பி அமர இன்னொரு எண்ணம் அவர்புத்தியில் பட்டது. இங்கு ஏராளமான மக்கள்வந்து யேசுவைப் பார்க்கிறார்கள். யேசுவும் நற்கருணைச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து தம்மிடம் வரும் மக்களை மிகவும் கவனமாய்ப் பார்ப்பார். அவர்கள் உள்ளத்தில் பேசுவார். அவரின் கண்கள் அன்பின் பேச்சுப்பேசும். அன்று ஒருநாள் மரியமதலேனாள் யேசுவின் பாதத்தண்டையிலிருந்து அவர் திருவசனங்களைத் தனது இருதயத்தில் ஊடுருவ விட்டதுபோல், யாழ்நகரகத்தோலிக்க மக்கள் இங்கு யேசுவின் பாதத்தடியில் இருந்து அவரின் அன்பு வசனங்களைத் தங்கள் உள்ளங்களில் ஏற்கும் காட்சியைக் காணும் கண் பாக்கியம் பெற்றது. இந்த மக்களின் அன்புள்ள இருதயங்களை அன்பின் அரசர் இருதய ஆண்டவர் அரவணைத்து ஆசீர்வதிக்கும் காட்சியைக் காணும் கண் பாக்கியம் பெற்றதுஎன்ற சிந்தனையில் சூழ்ந்திருந்தார்.

(வளரும்)

✠

**அலெக்ஸிஸ் யோசவ்**
**றேமன் பிகிருடோ**

அமரத்துவமடைந்த

## 2-ம் வருட நினைவு

| தோற்றம்: | மறைவு : |
|---|---|
| 17-7-60. | 27-10-67. |

"சிறுவர்களை நம்மிடம் வரவிடுங்கள்; ஏனெனில் மோட்ச இராச்சியம் அப்படிப்பட்டவர்கள் உடையது."

**சித்தமே நிறை வுற்றமாதவ**
**சிலனே சின்ன றேமனே**
**அத்தனாரு கொன்றவேகியே**
**ஆண்டிரு கால னீண்டதே**
**மெத்துமாகுல முற்றமோனமாய்**
**முகுரங்காட்டிடு சித்திரமே**
**நத்துவானதை நாடினீரிறை**
**நோக்குவீர் நல னுக்குவீர்.**

மண்ணில் மறைந்தாலும், எம் மனதில் மறையாது தம் இனிய பேச்சாலும், செயலாலும் எம்மை மகிழ்வித்து அனைவரதும் அன்புக்கு உரியவராய் சிந்தை நிறைந்திருக்கும் செல்வன் றேமன் யேசுவின்மடியில் இளைப்பாறச் சென்ற 2-ம்வருட நினைவு தினம் 27-10-69இல். அத்தினம் பள்ளிமுனை சந்தலூசியா ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

சின்னறேமன் சகல அர்ச்சியசிஷ்டர்கள் கூட்டத்துடன் சேர்ந்து, வல்லதேவனை வாழ்த்துவாராக.

ஆசைமகனை இழந்து நிற்கும்
பெற்றோர்: நீ. அ. பிகிருடோ, றீற்று றேச். சகோதரர்: ஸ்பெல்மன், றோமினு, றிச்மன்ட், பேத்தியார்: ம. சந்தலேனு றேச்.

பள்ளிமுனை, மன்னார்.

### லண்டனில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தோலிக்க சமூகநிலையமாக மாற்றப் பலவகைப்பட்ட வேலைகளிருந்தன. நிலையத்தில் ஒரு சிற்றாலயம் உண்டு. பரிபாலிக்கும் கன்னியர்கள் வாசஸ்தலமும் உண்டு. இளைஞர் விரும்பப்படத்தக்க வகையான பலவகை விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. "இம்மாற்றங்களுக்குத் தேவைப்பட்ட தொண்டு மக்களால் இலவசமாகவே பெரும்பாலும் அளிக்கப்பட்டது, மக்கள் 23-ம் அருளப்பர் மேல் கொண்டுள்ள அன்பைத் தெளிவாகக் காட்டுகின்றது" எனத் திறப்பு விழாவில் கருதினல் ஹீனன் குறிப்பிட்டார்.

---

● சந்திரனில் மனிதனை இறக்கும் உடனடியான திட்டம் எதுவும் ரூஷியாவிடம் இல்லையென்று ரூஷிய வானவெளி விஞ்ஞானியான லெனுய்ட் செதெல் தெரிவித்திருக்கிறார். ஆனல், ரூஷியாவின் விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தில் இதற்கான சாத்தியம் உண்டென்றும் அவர் கூறியிருக்கிறார்.

● சீனு முதல் தடவையாகச் சென்ற 5-ம் திகதி நிலத்திற்கடியில் அணுக்குண்டு ஒன்றை வெடிக்கவைத்ததென்றும், அத்துடன் மூன்றாவது தடவையாகச் சலவாயுக்குண்டுப் பரிசோதனை நடத்தியதென்றும் செய்தி கிடைத்திருக்கிறது. தனது அணுக்குண்டுப்பலத்தை உலகறியச் செய்வதற்கே ஒரே வாரத்தில் இருகுண்டுகளையும் வெடிக்க வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

## திருஇருதய சபை

### யாழ்ப்பாணம்

மேற்படி சபையின்பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 25-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் 5மணிக்கு அர்ச்.ஞானப்பிரகாசியார் சாலையில் நடைபெறும். தவருது சமுகமளிக்கும்படி அங்கத்தவர்கள் தயவாக வேண்டப் படுகின்றனர்.

✠

**ஐந்தாவது வருட**
**மரண ஞாபகம்**

| தோற்றம்: | மறைவு : |
|---|---|
| 26—7—24 | 23—10—64 |

"காலையில் மலர்ந்து, மாலையில் குவியும் மலர்போல் என் வாழ்வு மறைந்தாயிற்று. சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் நேசியுங்கள்."

திரு. மத்தியாஸ் செபமாலை (நல்லையா) திடீர்மரணமடைந்த 5-வது வருடம் 13-10-69 இல் பூர்த்தியாகிறது. எனவே, அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி வண. குருமார், சங் கன்னியர்கள், விசுவாசிகளைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உறவினர்.

132/69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனா



### காருண்யம் :

ஈழத்தில் கிறிஸ்துவின் உண்மையொளியை பரப்புவதற்கென இயங்கிவரும் தேசிய மறைபரப்பு நடுநிலையத்திலிருந்து வெளியாகும் சிறிய சஞ்சிகையே **காருண்யம்** ஆகும். இச்சிறிய சஞ்சிகையின் பக்கங்களில் விசுவாசப்பரம்புதல் இயக்கத்தின் செய்திகளுடன் திருத்தந்தை சின்னப்பரின் சிறப்புச் செய்தியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விசுவாசப்பரம்புதலுக்கு எம்மாலான உதவியைச் செய்வதற்கு இச்சிறிய சஞ்சிகைக்கு சந்தா அனுப்புவதும் உகந்த முறையாகும். இன்றே வருட சந்தா ரூபா நான்கை அதிவண. மனிக் முத்துக்குமாரு, 29 பெரோரா ஒழுங்கை, கொழும்பு 6 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

### நடந்தது உண்மை :

அறுபத்தேழு வருடங்களின் முன்னல், யப்பானில் டோக்கியோ நகரவீதியொன்றில் இரு படைவீரர்கள் சென்று கொண்டிருந்தனர். வழியில் அவர்கள் கவனத்தை விளம்பரமொன்று கவர்ந்தது. **கத்தோலிக்க திருச்சபையைப்பற்றி அறிந்து கொள்ள ஆசித்தால் உள்ளே வாருங்கள்** என அந்த விளம்பரம் கூறியது. சென்று பார்ப்போமே என்று ஒருவன் கூறினன். மற்றவனும் சம்மதிக்க உள்ளே சென்றனர். மாதங்கள் சில சென்றன. இருவரும் தங்கள் மனைவியருடன் ஞானமுழுக்குப் பெற்று திருச்சபையுள் இணைந்தனர். ஒரு வீரனின் புதல்வர் குருவாக திருமுழுக் காட்டப்பெற்ருர்.

### இன்னும் அதிகம் :

மற்றைய வீரனின் கதியாது? அவனது புதல்வியொருத்தி கன்னியர் மடத்தில் சேர்ந்தாள். இரு புதல்வர்கள் குருவாகினர். அவர்களில் ஒருவர் யப்பானில் நன்குபிரபல்யம் அடைந்துள்ள பேர்யுயா மேற்றிராணியாராவர். இம்மேற்றிராணியாரின் தந்தையாரான பேர்யுயா தனது துணைவியுடன் திவ்வியநற்கருணைச் சந்திப்பு நடாத்திக் கொண்டிருந்தபோது (இரண்டாவது உலகப்போரின்போது) குண்டுவீழ்ச்சியால் கொல்லப்பட்டார். என்னேபாக்கியம்.

### குழந்தை யேசு :

பிறேக் நகர குழந்தை யேசுவின் சொருபம்பற்றி காவலன் இதழ்களில் முன்னர் நேயர்கள் படித்திருப்பார்கள். ரோமை நகரத்தில் கப்பித்தாலின் குன்றின்மேல் அமைந்துள்ள சாந்தமரியா ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் குழந்தை யேசுவின் சொருபம்பற்றிய சுவையான செய்திகள் இங்கு தரப்படுகின்றன. பதினைந்தாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் இச்சொருபம் யெருசலேமில் வைத்து பிரான்சிஸ்கன் சபைத்துறவியொருவரால் யெத்சமெனித் தோட்டத்திலுள்ள ஒலிவமரத்திலிருந்து எடுக்கப்பட்ட கிளையொன்றில் இருந்து தயாரிக்கப்பட்டது.

### யாத்திரை :

சொருபம் செதுக்கப்பட்டபின்னர் பெட்டியொன்றில் பக்குவமாக அடைத்து கடல் மார்க்கமாக ரோமைநகரத்துக்கு கொண்டுவந்தார்கள். வழியில் காற்றும் மழையும் கலந்தடித்தது. கடல் கொந்தளித்தெழும்பியது. அலைகள்கிளம்பி நாவாயை அலைக்கழித்தன. பேரலையொன்று கப்பலின் மேற்றளத்திலிருந்த பெட்டியையே அடித்துக்கொண்டு போய்விட்டது. பிரயாணிகள் உயிர்தப்பியதே போதிசயமாயிற்று. சொருபத்தைச் செதுக்கிய துறவியோ மிக்க வருத்தத்துடன் குழந்தையேசுவை வேண்டிக் கொண்டிருக்க நாவாய் லிவர்ணோ துறையை வந்தடைந்தது.

### அதிசய நிகழ்ச்சி :

அத்தருணம் பிரயாணிகளின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ஆம் சொருபப்பெட்டி கப்பலின் பின்னுக மிதந்துவந்து கொண்டிருந்தது. கப்பலின் மாலுமிகள் மாறிமாறி தங்கள் கரங்களை நீட்டி பெட்டியைப் பிடிக்க முயன்றபோதெல்லாம் பேரலைகள் வந்து பெட்டியைத் தள்ளிச் சென்றன. இறுதியாக மேற்படி துறவி குழந்தை யேசுவை பிரார்த்தித்தவண்ணம் கையை நீட்டி பெட்டியை இழுத்து கப்பலுக்குள் எடுத்து வைத்தார். இந்நிகழ்ச்சியை அறிந்த ரோமை நகரமக்கள் பெருமகிழ்ச்சியுடன் திரளாகக் கூடிவந்து குழந்தையேசுவை ஆடம்பரமாக அழைத்துச் சென்றனராம்.

### மீண்டும் சோதனைகள் :

சொருபத்துக்கு மீண்டும் பல இன்னல்கள் நேர்ந்தன. ஒருமுறை சொருபத்தின் அழகினல் கவரப்பெற்ற மங்கையொருத்தி இரகசியமாக அதைக் களவாடிச் சென்றுளெனினும் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. 1527-ல் ரோமை நகரம் தீக்கிரையாகியபோது இச்சொருபம்மட்டுமே அழிவினின்று அற்புதமாக காப்பாற்றப்பட்டது.

### குழந்தைகளின் மருத்துவர் :

ரோமைநகரத்தில் பெற்றோர்கள் தங்கள் பச்சிளங் குழந்தைகளை இங்குகொண்டு வந்து சொருபத்தின் பாதத்தில் வளர்த்திப் பிரார்த்திப்பது மனதை உருக்கும் ஒரு காட்சியாகும். குழந்தைகள் தங்கள் பிஞ்சுக் கரங்களால் பாலக யேசுவுக்கெழுதும் கடிதங்களின் குவியல்களை சொருபத்தின் ஒருபக்கத்தில் காணலாம். சொருபத்தைச் சுற்றிவர குழந்தைகளின் நலன்கட்காக செய்யப்பட்ட நேர்த்திகள் பூர்த்தியானதற்கு நன்றியாக பெற்ருேரால் அனுப்பப்பட்ட தங்கச் சங்கிலிகள் காப்புகள் முதலியன மலையாகக் குவிந்து கிடக்கின்றன.

### யேசுவின் பயணம் :

பலதருணங்களில் குழந்தை யேசுவின் சொருபத்தை அங்கு காணமுடியாது. காரணமென்ன தெரியுமா? வியாதியால் வருந்தும் குழந்தைகளிடம் குழந்தையேசு சென்றுவிடுவதுதான். ரோமை நகரத்தில் குழந்தையொன்று கடின நோயினல் வருந்தினல் பெற்ருேர் போலீசுக்குத் தெரிவிப்பார்கள். போலீஸ்காரர்கள் மிக்க மரியாதை வைபவங்களுடன் பாலகயேசுவின் சொருபத்தை அந்தவீட்டுக்கு கொண்டுவந்து நோயுற்ற குழந்தையின் பக்கலில் வைப்பர். பகிரங்க வேண்டுதல்கள் நடைபெற்றபின் பாலகயேசு மீண்டும் தமதில்லத்துக்குச் செல்வார்.

### முடிபுனைதல் :

பதின்மூன்ருவது சிங்கராய பாப்பரசரின் ஆணைப்படி பாலகயேசுவின் சொருபத்தின் சிரசில் 1897-ம் ஆண்டு வைகாசித்திங்கள் இரண்டாம்நாளில் தங்கமுடி புனைவிக்கப்பெற்றது. இவ்வைபவம் எட்டுநாட்களாகரோமானியர்களால் பெருவிழாவாக கொண்டாடப்பட்டது.

### அருளப்பருடன் சிரிப்போம் :

ஒருநாள் திருத்தந்தை அருளப்பர் வழக்கம்போல தனது தோட்டத்தில் உலாவச் சென்ருர். ஒரு பக்கத்தில் திராட்சைத் தோட்டத்திலிருந்து குலைகுலையாக முந்திரிகைப்பழங்களை தொழிற்சாலைக்கு கொண்டுசென்றதை கண்ட திருத்தந்தை தாமும் அவர்களைப் பின் தொடர்ந்தார். கனிகளைப் பிழிந்து இரசமாக்கும் பிரதம தொழிலாளி வெனிஸ்நகரைச் சேர்ந்தவர். பாப்பரசருக்கு நன்கு பழக்கமானவர்.

### திராட்சைத்தொழில் :

காலஞ்சென்ற பாப்பரசரும் திராட்சைத்தொழிலில் பழம்தின்று கொட்டையும் போட்டவர். எனவே அவர் அங்கு நுழைந்து தொழிலாளிகளின் அலுவல்களை நுணுக்கமாக கவனிக்கத் தொடங்கினர். பிரதம தொழிலாளி ஒரு கண்ணுடிப் பாத்திரத்தை எடுத்து அப்பொழுதான் வடிக்கப்பட்ட இரசத்தால் நிரப்பி மரியாதையாக திருத்தந்தையிடம் கொடுத்தார். அருளப்பர் முதலில் சூரியனுக்கு நேரே பாத்திரத்தைப் பிடித்தார். இரசத்தின் நிறத்தை நன்கு அவதானித்தார். அடுத்து அதனை நாசியருகே கொண்டு சென்று அதன் வாசனையை முகர்ந்து பார்த்தார்.

### குருமாருக்கு காட்டாதே :

அங்கிருந்த தொழிலாளியொருவன் மற்றவனிடம் சொன்னன். "இவர் கைதேர்ந்த தொழிலாளியடா, இவரிடம் கணக்குவிட்டமுடியாது." திருத்தந்தை அடுத்து தனது கரங்களால் இரசத்தின் உஷ்ணத்தை அளந்தார். இறுதியாக கண்களை மூடிக் கொண்டு ஒரு மிடறுஇரசத்தை உறிஞ்சினர். பின்னர் பிரதம தொழிலாளியிடம் கூறியதாவது: "என்றிக்கோ ஒரு உதவி செய்வாயா?" தொழிலாளிகள் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். இரசம் சரியில்லை, குப்பையிலே கொட்டுங்கள் என்பதை மரியாதையாக பாப்பு சொல்லப் போகிருரென அவர்கள் கருதினர். அருளப்பரோ அமைதியாகக் கூறுவார்: "இந்த இரசத்தை மட்டும் இங்கே வருகிற குருமாருக்கு கொடுக்கவேண்டாம். அப்புறம் அவர்கள் என்னிடம் வந்து ஒருநாளையில் நான்கு அல்லது ஐந்து பூசைகள் நிறைவேற்ற உத்தரவுதரும்படி கெஞ்சுவார்கள்."

### நினைவுமலர் :

காங்கேசன்துறை வட்டார ஆசிரியர் சங்கத்தினர் அமரர் மேரி யோசவ் சீமான்பிள்ளையவர்களை நினைவுகூருமுகமாக மலரொன்றை வெளியிட்டிருக்கின்றனர். இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி அதிகாரியாக சிறப்புப்பணியாற்றிய சீமான்பிள்ளையவர்கள் இறுதியாக காங்கேசன்துறை வட்டார கல்வியதிகாரியாக தொண்டாற்றுகையிலேயே இறைவனடி சேர்ந்தார். காவலனின் நீண்டகால எழுத்தாளரும், கவிஞருமான வித்துவான் அடைக்கலமுத்து அவர்கள் இம்மலரின் ஆசிரியராவர். சேவையாற்றிய இடமெல்லாம் ஆசிரியர்களின் நல்லெண்ணத்தைத் தேடிக்கொண்ட இப்பெருமகனின் பெருமைகளை எடுத்தோத இம்மலரை தொகுத்தவர்கள் அரும்பாடுபட்டிருக்கிருர்கள். காலஞ்சென்ற அருட்திரு. லோங் அடிகளாருட்பட பலபெரியார்களின் கட்டுரைகள், கவிதைகள் இம்மலரை அணிசெய்கின்றன.

# மணியோசை

## 8

கிறிஸ்துவின் ஆட்சியில் தேவதூதர்களின் பங்கு என்ன? இவர்கள் உருவம் இல்லாத அரூபிகள்; மனிதனுக்கு முன்னர் இறைவனல் உருவாக்கப்பட்டவர்கள்; இறைவனுக்கு ஊழியம் செய்வதை தங்கள் சொந்த அபிப்பிராயத்தின்படி கொண்டு செல்ல அவரால் சுதந்திரம் தரப்பட்டவர்கள்.

விண்ணகத்தந்தைக்கு சமமாக அதிகாரமமதை கொண்டு புரட்சிசெய்தனர் இவர்களில் ஒருபகுதியினர். நரகநெருப்பில் தள்ளப்பட்ட இப்புரட்சியாளரின் பெயர் பசாசுகள். பிரமாணிக்கத்துடன் சேவையாற்றும் தூதர்கள் கிறிஸ்துவின்இராச்சியத்தில் உன்னத பங்கு கொண்டுள்ளனர் என வெளியிடுத்தல்களிலிருந்து நாம் தெரிந்துகொள்கின்ருேம்.

தமது தானபதிகளாக, தூதர்களாக, பிரதிநிதிகளாக விண்ணகத்தந்தை இவர்களை உபயோகிக்கின்ருர். சில சந்தர்ப்பங்களில் அவரின் அங்கோரத்துடன் மனிதகண்களுக்கு இத்தூதர்கள் காணப்பட்டுமிருக்கின்றனர்.

திருமுழுக்கப்பரின் தந்தையாரான சக்கரியாசுக்கு தூதனெருவர் காணப்பட்டார். அவர் தந்தையாகும் நற்செய்தியையும் இரட்சகரின் முன்னேடியாக அவரது புதல்வன் விளங்குவானெனவும் தெரிவித்தார். லூக். 1 : 13—17.

கன்னிமரியாளுக்கு தூதனெருவன் காணப்பட்டான். இரட்சகரின் தாயாக அவளின் சம்மதத்தை வேண்டி நின்ருன். லூக். 1 : 26—38

தனது துணைவி கர்ப்பமாகியதை அறிந்து சந்தேகித்தார் சூசையப்பர். இரவோடிரவாக வெளிக்கிளம்ப எண்ணினர். சம்மனசொன்று தோன்றி அவருக்கு உண்மையை உணர்த்தியது. மத். 1 : 19—22.

ஏரோதன் குழந்தையேசுவைக் கொல்லத்தேடினன். தேவனின் தூதர் சூசையப்பருக்குகாணப்பட்டு முன்னெச்சரிக்கை தந்தார். மத். 2 : 13—15.

பெத்லகேம் வயல்களில் இடைக்குக் காவல்செய்துநின்ற இடையருக்கு சம்மனசுகள் தோன்றி இரட்சகரின் வருகையைத் தெரியப்படுத்தின லூக். 2 : 8—13.

இறைவனின் செய்திகளை மானிடருக்குத் தெரிவிக்க தேவதூதர்கள் இவ்விதமே பலதடவைகளிலும் சென்றிருக்கின்றனர். இதுமட்டுமல்ல பூவுலகில் உள்ள ஒவ்வொரு சிருட்டிக்கும் தேவன் காவலாக சம்மனசொன்றை தந்துள்ளாரென திருச்சபையன்னை போதிக்கின்ருள்.

இந்தச் சிறுவர்களில் ஒருவரையாகுதல் அற்பமாய் எண்ணுதீர்கள். ஏனெனில் அவர்கள் காவலான தூதர்கள் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சமுகத்தை எந்நேரமும் நோக்கிக்கொண்டேயிருக்கின்றனர். மத். 18 : 10.

மேற்கூறியவை யேசுநாதரின் வார்த்தைகள். பழைய ஆகமத்திலிருந்தும் இதற்கு ஆதாரம் காட்டலாம் உன் வழிகளிலெல்லாம் உன்னைப் பாதுகாக்கும்படி அவர் தம் தூதர்கட்கு கட்டளையிடுவார். சங். 91 : 11 எனவே நாம் ஒவ்வொருவரும் எங்கள் வழிகளை நோக்கவும், எம்மை வழிநடாத்தவும், பாதுகாக்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறிஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

### வினா 10.

**சதுசேயர் என்பவர்கள் யார்? நமது ஆண்டவரிடம் அவர்கள் கேட்ட கேள்வி யாது? அவர் கொடுத்த பதில் என்ன? உத்தானத்தையிட்டுத் திருச்சபை நமக்குப் படிப்பிக்கும் போதனை என்ன?**

சதுசேயர் என்னும் பதம் "சடொக்" என்னும் நாமத்திலிருந்து பிறந்தது. இந்நாமத்தைக் கீர்த்திபெற்ற இருவர் புனைந்திருந்தனர். I. சலமோன் அரசன் காலத்தில் 'சடொக்' என்னும் பெரிய குரு வாழ்ந்தார். II. கி. மு. 250-ம் ஆண்டளவில் வாழ்ந்த அன்ரிகொனுஸ் சொக்கேயுஸ் என்பவரின் சீடனான சடொக் என்பவர் அக்காலத்து சனட்றின் சங்கத்து அங்கத்தவர். ஆசாரிய வம்ச வாரிசுகளாயிருந்தமையாலும் களங்கமற்ற யூத குருதியைக் கொண்டிருந்ததினாலும் சதுசேயர் தாம் 'சடொக்' என்ற பெரிய குருவின் வழித்தோன்றல்கள் என்னும் பெருமை பாராட்டியதோடு அன்ரிகோனுஸ் சொக்கேயுஸின் சீடனான 'சடொக்'கின் போதனைகளைப் பின்பற்றினர். 'சடொக்' என்பவர் மறுவாழ்வில் தண்டனை கிடைக்கும் என்னும் பயத்தினாலோ, அன்றேல் சம்பாவனை கிடைக்கும் என்னும் நம்பிக்கையினாலோ நாம் இவ்வுலகில் புண்ணியம் செய்யலாகாது எனப் போதித்தார். அதாவது எதிர்கால சம்பாவனையோ தண்டனையோ அவரது போதனையில் இடம்பெறவில்லை. சுருங்கக்கூறின் ஆன்மாவின் அழியாத் தன்மையை மறுத்தார். சதுசேயர் யூத குருத்துவ வம்சத்தைச்சேர்ந்த பிரபுக்களாவர்.

யோசேப்பஸ் என்ற சரித்திர ஆசிரியர் இவ்வகுப்பினரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "உடலுடன் ஆன்மாவும் மரிப்பதாக இவர்கள் விசுவசிக்கிறார்கள். சட்டத்திற்கு அப்பாற்பட்டவைகளை அனுசரிக்க வேண்டுமென்று இவர்கள் எண்ணுவதில்லை. ஆயினும், இவர்கள் நீதிபதிகளாக மாறும்போது பரிசேயரின் எண்ணங்களுக்கு அடுத்தவிதமாகச் செயலாற்றுவார்கள். ஏனெனில், இவர்கள் இவ்விதம் செய்யாவிட்டால் யூத மக்கள் இவர்களை ஏற்க மறுப்பர்.

(அன்ரிக். 18 : 1—14)

சதுசேயர் சமுதாயத்தின் இரண்டாம்வகுப்பினர். இவர்கள் விதியை நம்புவதில்லை. இறைவன் எங்கள்மேல் கரிசனை கொண்டுள்ளார் என்பதையும் இவர்கள் மறுத்தார்கள். நன்மையோ அன்றேல் தீமையோ செய்தல் மனிதனுடைய சுயாதீனத்திற்கு விடப்பட்டிருக்கிறது என்றும், ஆகவே அவன் தன் இஷ்டப்படி செயலாற்றலாம் என்றும் நம்பினர். ஆத்துமத்தின் அழியாத்தன்மையையும் மறுஉலக சம்பாவனை, தண்டனைகளையும் இவர்கள் மறுத்தார்கள் (யுத்தங்கள் 2 : 8—14.)

"சதுசேயர் உத்தானம் இல்லையென்றும், அரூபிகளும் தேவதூதர்களும் இல்லையென்றும் கூறுகிறார்கள். ஆனால், பரிசேயர் இவ்விரண்டும் உண்டென்று நம்புகிறார்கள்"

(அப். நட. 23 : 8).

மேற்கூறிய பந்திகளில் இருந்து சதுசேயரின் நம்பிக்கைகளை நாம் சற்று அறிந்துகொள்ளலாம். பரிசேயர் தம்மிலும் கீழ்ப்பட்டவர்கள் என்பதாலும், அவர்கள் அநேக மாமூல்களையும் பாரம்பரியங்களையும் சேர்த்தமையினாலும் சதுசேயர் இவர்களை வெறுத்து இவர்களுக்கு எதிர்ப்புக் காட்டினார்கள். சட்டத்துடன் இன்னும் அநேகசட்டங்களைப் பரிசேயர் ஒருபுறம் கூட்ட, சதுசேயர் அதிலிருந்து அநேக சட்டங்களைக் குறைத்தனர். இவர்கள் பஞ்சாகமத்தை (வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் — 'பென்ராற்று') மாத்திரம் ஏற்று மற்றும் ஆகமங்களை அகற்றினார்கள். மோயீசனால் இஸ்ராயேலருக்குக் கொடுக்கப்பட்டவற்றை மாத்திரம் மிகவும் நுணுக்கமாகக் காப்பாற்றினார்கள். தேவாதினத்தை அவர்கள் மறுத்து, நன்மையும் தீமையும் மனிதனின் கையிலேயே தங்கியிருக்கின்றன எனப் போதித்தார்கள். தேவாலயத்தில் சதுசேயர் ஓர் உன்னத இடத்தை வகித்தனர். மக்களோடு புழங்காது அவர்களைத் தூரத்தில் வைத்திருந்ததினால் மக்களும் அவர்களின் பகட்டையும், சன்மார்க்கவீனத்தையும், அந்நிய அரசாட்சிக்கு அவர்கள் ஆதரவு காட்டியமையையும், கிரேக்க உரோம பழக்கவழக்கங்களை அவர்கள் இலக்கியங்களில் ஆர்வத்துடன் ஏற்றதையும் வெறுத்தனர்.

உலகத்தில் ஓர் உன்னத ஸ்தானத்தை வகிப்பதே சதுசேயரின் முதல் இலக்காக அமைந்தது. 'மெசியா' எனப்படும் இரட்சகர் வருவாரென்ற பரிசேயரின் கனவை இவர்கள் பரிகசித்தனர். தங்கள் நாடு முன்னேற வேண்டுமானால், மெசியாவையல்ல உரோம படைப் பலத்தையே எதிர்நோக்க வேண்டுமென்று சதுசேயர் நம்பினர். பொதுப்பட சதுசேயர் சமயப்பற்று அற்றவர்கள். மறுபுறத்தில் உலக செல்வத்தையும் அதிகாரத்தையும் தங்கள் முதல் இலக்காகக் கொண்டிருந்தனர். பரிசேயர்களைப் போல சதுசேயர் நமதாண்டவருடன் அநேக தடவை முரண்பட்டதில்லை. புனிதலூக்காஸ் குறித்ததுபோல (20:27), ஒரேயொருதடவை மாத்திரம் இவர்கள் நமது ஆண்டவரிடம் உத்தானத்தைப்பற்றி வினவினர். ஆயினும் பிரதான ஆசாரியர்களுட் பெரும்பாலர் சதுசேயராயிருந்தபடியால் இவ்வகுப்பினருள் ஒருவரே நமதாண்டவர் 'மரணத்திற்குப் பாத்திரவான்' என்று சட்டப்படி அவருக்குத் தீர்வையிட்டான்.

[வரும்]

# இளவாலையில் துணை ஆயர்

## "ஆடம்பர வரவேற்பை நான் விரும்பவில்லை"

கடந்த 5-10-69 யாழ் துணை ஆயர் வந். எல். ஆர். அன்ரனி ஆண்டகை இளவாலைக்கு விஜயம் செய்தபோது சென். ஜேம்ஸ் பங்குமக்களால் மகத்தான வரவேற்பளிக்கப் பட்டது. புனித செபமாலை மாதாவின் திருநாட் பூசையை நிறைவேற்றியதோடு சிறுவர்களுக்கு உறுதிபூசுதல், மூதன் நன்மை ஆகிய திருவருட் சாதனங்களையும் அளித்தார்.

திருப்பலியின் பின் குருமனைக்கு முன் அழகுற அலங்கரிக்கப் பட்டிருந்த அலங்கார மேடைக்கு ஆயர் அழைத்து வரப்படவே மூதன் நன்மை பெற்ற சிறுவராலும் பெரியோராலும் மாலைகள் சூட்டப்பட்டன. திரு. ரி. பெனடிக்ற் திராட்சப்பழக் குலைகளால் கட்டப்பெற்றமாலை ஒன்றை ஆயருக்குச் சூட்டினார்.

அதன்மேல் இளைஞரால் வரவேற்புப்பா பாடப்பெற்றது. பின்னர் செல்வன் ரி. ஆர். மனோகரன் உபசாரப் பத்திரத்தை வாசித்தளித்தார். சிறுமிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பொற்கிளியும் வழங்கப்பட்டது.

ஈற்றில் ஆயர் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து இத்தகைய ஆடம்பரங்களை 2-ம் வத்திக்கான் சங்கம் கண்டிப்பாக வெறுக்கிறதென்றும் தாமும் ஆடம்பர வரவேற்பை விரும்பவில்லை என்றும் கூறி சமாதானம் பற்றிய சிறு சொற்பெருக்காற்றினார். ஆயரின் திருக்கர ஆசீருடன் விழா முடிவாயது. சிறுவர்க்கும் பெரியோக்கும் ஆயர் படங்கள் அன்பளிப்புச்செய்தார்.

—நிருபர்.

# மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி

குருநகர் கலைக்கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டிய போட்டித் தொடரில் ஒன்றான மெய் வல்லுனர் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 2-ம், 3-ம், திகதிகளில் குருநகரில் வெகு விமரிசையாக "குருநகர் மக்கள் விழா" வாக நடைபெற்றது.

றெக்கிளமேசன் கடலனை மைதானத்திலும் குருநகர் திறந்த வெளியிலும் நடைபெற்ற இப்போட்டியில் நெய்தல் வளர்பிறை மன்றம், இளைஞர் கலைக்கழகம், புனிதவளன் விளையாட்டுக் கழகம், குருநகர் சன சமூக நிலையம், யுத் கவுன்சில், அப்பலோ 11 விளையாட்டுக் கழகம் போன்ற பல இயக்கங்கள் பங்குபற்றின.

பெரும் திரளான மக்களின் மத்தியில் விறுவிறுப்பாகவும், வெகு சிறப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் உயர் திரு. சி. நாகராசா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

கழகத் தலைவர் திரு. இ. டோறஸ் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மாநகர முதல்வர் அவர்கள் சிறப்புரை நிகழ்த்துகையில் குருநகர் கலைக்கழகத்தின் முயற்சியினைப் பாராட்டிப் பேசினார்.

சிறப்புரையைத் தொடர்ந்து மெய்வல்லுனர் நற்சான்றிதழ்கள் வெற்றி வீரர்களுக்கு வழங்கப்பட்டன. கடல்சாரணர்களுக்கு கலைச்சின்னங்களும் முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன.

ஈற்றில் விளையாட்டுப் போட்டிப் பிரதம மேற்பார்வையாளர் ஆசிரியர் சி. அகஸ்ரின் அவர்கள் நன்றி நவின்றார்கள்.

● ருஷியா சென்ற 11-ம் திகதி விண்வெளி வீரர்கள் இருவருடன் கூடிய செயற்கைக் கிரகம் ஒன்றை வான வெளிக்கு அனுப்பியிருக்கிறது. விண்வெளியில் மேடை ஒன்றை அமைக்கு முகமாகவே இது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த மேடையை அமைத்து அதிலிருந்து சந்திர மண்டலத்தைப் பற்றியும், அதற்கப்பாலுள்ள பகுதிகளைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்த ஏற்கனவே அது திட்டமிட்டிருந்தது.

# நானைய பெரியோர்

கொஞ்சும் மொழி, மழலைச் சொல், கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம், எவரையும் கவரும் விசேட தன்மை, அதன் செயல்கள் அத்தனையிலுமே ஒரு புதுமை. ஆம் அது ஒரு குழந்தை என்று நான் கூறாமலே எல்லோர்க்கும் புரியும்.

சர்வதேச சிறுவர் தினம் என்று உலகம் முழுவதும் சிறுவர்க்கான தினம் கொண்டாடப்படுகிறது. நாளைய உலகின் தலைவர்களாக, நாட்டின் நற்பிரஜைகளாக சிறுவரை உருவாக்குவது நம்மனைவரின் கடனாகும். பாடசாலைகளில் ஆசிரியர்களும், கன்னியர்களும், குருக்களும் இருக்கிறார்கள்தானே என்று பெற்றோர்தம் சிறுவரில் அக்கறையற்றிருப்பார்களானால் அது மடமைத்தனமாகும். குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். சிறுவர்கள் வார்த்தைகளை உச்சரிக்க ஆரம்பிக்கும்போதே சிறு செபங்களையும் நல்ல வார்த்தைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். மாறாக இன்றைய சிறுவர் சினிமாப் பாடல்களில் சிறந்து விளங்குவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

சிறுவரின் ஆன்ம சரீர நலனில் கூடிய கவனம் பெற்றோரினதும் மற்றோரினதும் தலையாய கடன். சுகாதார வாழ்க்கையைக் கடைப்பிடித்து அவர்களைப் பலமுள்ளவர்களாய் வளர்க்க வேண்டும். போஷாக்கற்ற உணவினால் இன்றைய இளம் சந்ததியின் கண், காது, பல், மயிர் என்பன பாதிக்கப் படுகின்றன. நன்கு ஓடியாடி விளையாடவும் ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவும் அனுமதிக்க வேண்டும். அவர்களின் வயதுக்கேற்ற வகையில் செபங்களையும் கிறிஸ்தவ உண்மைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்னும் மிக விரும்பத்தக்கதொன்று சிறுவயதில் தானே தேவ அழைத்தல் பற்றிய சிந்தனைகளை அவர்கள் இதயத்தில் விதைத்துவிட வேண்டும். குருத்துவ சந்நியாச, கன்னியர் சிறப்புகளை எடுத்துரைக்க வேண்டும். "குழந்தையின் பள்ளிக்கூடம் தாயின் இதயம்" என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார். எனவே சிறுவர் வளரும் சூழ்நிலைகளையும் நன்கு கவனிக்க

[மறுபக்கம் பார்க்கவும்]

# நினைவு கூருவோம்

**திருமதி பவுலீன் பல்தானு ஆனந்தம் டயஸ்**
**இறைவனடி சேர்ந்த முதல்வருட நினைவு தினம்**

மறைவு: 26-10-1968

சீவியத்தில் நாம் இவரை நேசித்தோம்; நம்முடைய செபங்களால்
கர்த்தரின் வீட்டுக்குள் இட்டுச்செல்லும் வரை
இவரை நாம் மறவாதிருப்போம்

ஆண்டவரே, நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்; முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கச் செய்தருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27-10-69 திங்கட்கிழமை காலை 6மணியளவில் பேசாலை பரி. வெற்றிநாயகி ஆலயத்தில் துக்கப்பாடற்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், இனசன அன்பர்கள் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவவின் பிரிவால் துயருறும்: கணவர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பேசாலை 131-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர், மாதா சபைகளின் 8-வது ஆண்டுவிழா

மூதூர் மாதாசபைகளின் 8-வது ஆண்டுவிழா இம்மாதம் 9-ம், 10-ம் தேதிகளில் மூதூரில் வெகு விமரிசையாயும், கோலாகலமாயும் கொண்டாடப்பட்டது. 9-ந்தேதி காலை 8மணியளவில் இதற்கென அழைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண துணைஆயர் வந். லே. இ. அன்ரனிஆண்டகை அவர்களையும் அவரோடுவந்த ஏனைய குருப்பிரசாதிகளையும் மூதூர் பங்குச் சுவாமியாரும், மேற்படி சபைகளின் போஷகருமாகிய வண. அரசரெத்தினம் அடிகளும் ஏனைய சபைஉறுப்பினர்களும் முச்சந்தியில் வரவேற்று, நகர்வல பவனியாய் அழைத்துச்சென்றுவிழாமண்டபம் அடைந்ததும் மண்டபமத்தியில் அமைக்கப்பட்டிருந்த பலிபீடத்தில் மேற்றிராணியாண்டகை அவர்களாலும், வண. அரசரெத்தினம், வண. கு. மரியதாஸ் அடிகள் அவர்களாலும் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் வண. பீற்றர் துரைரெத்தினம் அடிகள் தலைமையில் வண. மரியதாஸ் அடிகளால் சுவிசேஷ ஆராய்ச்சியும் கலந்துரையாடலும், மாலை, மாவட்ட சபைத்தலைவர் திரு. அருளப்பு ரேச்டிவாஸ் அவர்கள் தலைமையில் திரு. ம. ஸ்ரனிஸ்லாஸ் ஆசிரியர் அவர்களால் 'ஒருவரைக் கிறீஸ்துவிடம் அழைத்தல்' என்னும் விடயம் பற்றி ஒரு சொற்பொழிவும், கலந்துரையாடலும் நடைபெற்றன. மாலை 6மணியளவில் அன்ரனிஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சபைக் கன்னியர்களால் வாழ்த்துப்பாக்கள் பாடப்பட்டு, அமலோற்பவ மாதாசபைத் தலைவர் திரு. ஏ. எவ். பெர்னாண்டோ அவர்களால் ஆண்டகைக்கு வந்தனோபசார வாழ்த்துமடல் பத்தியரூபத்தில் வாசித்தளிக்கப்பட்டது. பின்னர் பண்டிதர் திரு. வ. நிக்கொலாஸ் அவர்களால் 'தேம்பாவணிமகவருட்படலம்' என்னும் விடயம்பற்றி சிறந்ததோர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டதன் மேல் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற மாணவர்கட்கு ஆண்டகை அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது. பின் அமலோற்பவ மாதாசபைச் செயலாளரால் தயாரிக்கப்பட்டு மோட்சாரோபண மாதா சபைக் கன்னியர்களால் நடிக்கப்பட்ட 'மரியகொறற்றி' என்னும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

மறுநாள் 10-ந்தேதி கொட்டியாபுரப்பற்றுக் காரியாதிகாரி திரு. சாம்பசிவஐயர் தலைமையில் "மனிதஉரிமை மகாநாடு" நடைபெற்றது. நண்பகல் மாதா சபையினரால் அளிக்கப்பட்ட விருந்துவைபவத்தில் வந். அன்ரனிஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராயும், திருகோணமலை அங்கிளிக்கன்சபைப் பங்குக் குரவர், பல கத். குருப்பிரசாதிகள், திரு. சாம்பசிவஐயர் தம்பதிகள், பட்டினசபைத் தலைவர் ஜனாப் என். எம். அலியார் தம்பி ஆகியோரும் கௌரவ விருந்தினராய்க் கலந்துகொண்டு சபையோரைக் கௌரவப்படுத்தினர். பின் 3-30மணியளவில் வண. போஷக சுவாமியாரும், ஏனைய குருப்பிரசாதிகளும், சபையோர் அனைவரும் மூதூர் அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

மாலை 6மணியளவில் திரு. சாம்பசிவ ஐயர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேச்சுப்போட்டியில் முதலிடத்தைப்பெற்ற மாணவர்களின் பேச்சுக்குப்பின் அன்னாருக்கு திருமதி சாம்பசிவ ஐயர் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. பின்னர் மெதடிஸ்ற்சபைப் போதகர் வண. வேதநாயகம் அவர்களால் 'மனிதஉரிமையும் நம் நாடும்' என்னும் விஷயம் பற்றியும், வட்டாரக் கல்வி இயக்குனர் ஜனாப் எம்.எம். இபுறாகீம் அவர்களால் 'மனிதஉரிமைச் சாசனம்' என்னும் விஷயம் பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு ஈற்றில் மாதா சபை உறுப்பினர்களில் ஒருவராகிய திரு. வ. இராசரெத்தினம் ஆசிரியர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'முதற்குரல்' என்னும் வரலாற்று நாடகம் மேடையேற்றப்பட்டு அனைவரதும் பாராட்டைப் பெற்று, சாதி, சமய வேறுபாடின்றி நடைபெற்ற மகாநாடு இனிது சமாப்தியாயிற்று.

—பார்வையாளன்

# நாளைய பெரியோர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அவர்கள் பழகும் நண்பர், படிக்கும் புத்தகங்கள் போகுமிடங்கள் என்பன பற்றியும் கவனமாயிருக்க வேண்டும். வீட்டில் சினிமா பத்திரிகைகளும் புத்தகங்களும் நிறைந்திருக்குமானால் சிறுவரின் போக்கும் எதிர்காலத்தில் சினிமாவை நாடி நிற்கும்.

அகில உலகிலும் சிறுவர்க்கான தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் நாம் எமது சிறுவர் மட்டில் அக்கறையற்றிருந்தால் எமது சிறார்களின் எதிர்காலம் எப்படியிருக்கும்? மேற்கூறப்பட்ட சிறந்த சூழ்நிலைகளை எமது சிறார்களுக்களித்து அவர்களை நல்ல முறையில் கண்காணித்து வந்தால் நமது நாடு நல்லதோர் நிலையடையும். எமது திருமறைத்தாயும் லங்கா அன்னையும் கைகோர்த்து மகிழ்வர். நாளைய உலகில் தலைவர்களை நல்ல முறையில் வாழவைக்க ஆவன செய்வோமாக.

சிறுவர் உலகு சிறக்கட்டும்!
சிறந்ததோர் சமுதாயம் உருவாகட்டும்!!

[இம்மாதம் சர்வதேச சிறுவர்தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இதனை யொட்டியே இக் கட்டுரை வெளியிடப்படுகிறது]

இ. பேர்ணட்

கல்லூரியில் முதற் பாடமாக நான் அறிந்து கொண்டது பொறுமை என்கிற பெரும் பாடம் தான்.

— ஹெலன் கெல்லர்

# மணியோசை 8

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் இறைவனால் தூதரொருவர் தரப்பட்டுள்ளாரென நம்பிக்கை கொள்ளலாம்.

தேவனின் செய்திகளைத் தெரிவிப்பது, பாதுகாப்பது கிறிஸ்துவின் பணிவிடைகளைச் செய்வதும் தூதர்களின் அலுவல் ஆகும்.

புனிதரான மத்தேயு தமது நற்செய்தியில் நான்காம் அதிகாரத்தில் கிறிஸ்து சாத்தானால் சோதிக்கப்பட்டபின்னர் தூதர்கள் வந்து அவருக்குப்பணிவிடை செய்தார்களெனக் கூறுகின்றார்.

கிறிஸ்து ஜெத்சமெனித் தோட்டத்தில் இரத்தவேர்வையால் அவதியுற்றபோது தூதனொருவனால் ஆறுதல் படுத்தப்பட்டார்.

(லூக். 22 : 43.)

கிறிஸ்துவைப்பற்றப்பட்ட போது இராயப்பர் வாளை உருவி எதிர்த்தார். கிறிஸ்துவோ அவரைத் தடுத்து தாம் விரும்பினால் பரலோகதந்தையிடமிருந்து வானுலக சேனைகளை வரவழைக்கலாமென்பதைக் குறிப்பிட்டார் (மத். 26 : 53—54).

கிறிஸ்துவின்தேவைகளில் உதவிய வானுலக வீரர்கள் எங்கள் அவசரங்களிலும் அன்போடு உதவக் காத்திருக்கிறார்களென திருச்சபையன்னை கூறுவதற்கு மேற்கூறியவை ஆதாரமாகும்.

இறுதியில் தேவகுமாரன் பொதுத் தீர்வையின்போது மகிமைப் பிரதாபத்துடன் எழுந்தருளிவரும்போது சம்மனசுகளும் அவரின் தானுபதிகளாக கம்பீரத்துடன் வருவர்.

மனுமகன் மகிமைப்பிரதாபத்தோடு தமது தூதர்களோடு இறங்கி மகிமைச் சிம்மாசனத்தில் எழுந்தருளுவார் (மத். 25 : 31).

இறுதித் தீர்ப்பின்போது சம்மனசுகளே புண்ணியவான்களையும் பாவவாளர்களையும் பிரித்து வைப்பார்கள். இதை யேசுநாதர் நற்செய்தியில் கூறுகிறார்: மனிதர்முன் என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை மனுமகனும் தேவதூதர்களின் முன் மறுதலிப்பார். மனிதர்முன் என்னை அறிக்கையிடுகிறவன் எவனோ அவனை மனுமகனும் தேவதூதர்களின்முன் ஏற்றுக்கொள்ளுவார்.

(லூக். 12 : 8—9.)

நாம் கிறிஸ்துவின் இராச்சியத்தவர்கள். எமக்கும் தேவசந்நிதானத்துக்குமிடையில் நல்ல பிரதிநிதிகளாகவும் வழிகாட்டிகளாகவும், காவல் வீரர்களாகவும், இறுதியில் நடுத் தீர்க்கிறவர்களாகவும் விளங்கும்தூதர்களைத் தகுந்தபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டியது எம் கடமை. அதனால், நிரந்தர பேரின்பத்துக்கு வழி வகுத்தவர்களாவோம்.

நாளை ஞாயிறன்று கத்தோலிக்க உலகு கிறிஸ்துவின் இராஜரிக திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றது. உலகின் ஒவ்வொரு திக்கிலுமுள்ள கத்தோலிக்க தேவாலயங்கள் கிறிஸ் [illegible] சிக்கீதத்தை பிரமாணிக்கத்துடன் ஒலித்து அக்களிக்கின்றன.

இந்த எழுச்சிக் கீதம் பல அரிய கருத்துகளைக் கொண்டது. கிறிஸ்து வெற்றி கொள்கின்றார். கிறிஸ்து அரசாளுகின்றார். கிறிஸ்து ஆணையிடுகின்றார் என்பவை இக் கீதத்தின் ஆரம்ப வரிகள் ஆகும்.

இப்பாடல் நிகழ்காலத்திலேயே தொனிப்பதை நேயர்கள் அவதானிக்கலாம். கிறிஸ்து எங்கள் அரசர். இவ்வுலகின் அரசர்கள் போல குறிப்பிட்ட காலத்துக்கு பதவி வகித்தபின் மறைந்துவிடுபவர் அல்லர்.

கிறிஸ்து தேவாரசரின் ஆட்சி நேற்றும் இன்றும் நாளையும் உலகம் உள்ளவரைக்கும் உள்ளதென்பதையே இக்கருத்து உணர்த்துகின்றது.

கிறிஸ்து வெற்றிகொள்கிறார். ஆம். தம் வழியை நாடும் நல்லெண்ணமுள்ள மனிதரின் இதயங்களை அவர் வெற்றிகொள்கின்றார். அந்த இதயங்களில் அவர் ஆட்சி செலுத்துகின்றார். அந்த இதயங்களை அருள்வழியில், சன்மார்க்க பாதையில் நடாத்திச் செல்லும் தளபதி அவர்.

அருட்பிரசாதங்களை வழங்குபவர் அவர். தமது திருச்சபைமூலம் சன்மார்க்கவழிகளை ஆணையிடுபவர் அவர். உலகம் சரீரம் பசாசு என்ற எதிரிகளால் எமதான்மா அலைக்கழிக்கப்படும்போது ஆறுதல் தந்து பெலமீந்து எம்மை மோட்சபாதைக்கு நடாத்திச் செல்பவரும் அவரே.

எனவே கிறிஸ்து இராசாவின் திருநாளில் நாம் ஒரு விதி செய்வோம். ஞான முழுக்கு பெற்றபோது நாம் எடுத்துக்கொண்ட சத்தியத்தை புதுப்பிப்போம். எமது அரசருக்கு பிரமாணிக்கமாக ஒழுகுவதாக வாக்குப்பண்ணுவோம். இச்சத்தியத்தை எந்நாளும் காத்துவருவோம்.

— மடோனா

# பாட்டியின் செபமாலை

அவள் சிறுமியாய் இருந்தபொழுது அவளுடைய குடும்பம் ஒரு சிறிய வீட்டில் வசித்துவந்தது. அந்தச் சிறுமியின் பாட்டி அவர்களைச் சந்திக்க வந்தால் இரண்டு அல்லது மூன்று வாரங்களை அவர்களுடன் கழிப்பார். அந்நாட்களில் அந்த சிறுமியும் அவளது சகோதரும் படுக்கை அறையில் கட்டில்களை தமது பாட்டியுடன் பகிர்ந்து கொள்வர். மூத்தவளான அந்தச் சிறுமி தம் பாட்டிக்கருகில் நித்திரை செய்வாள். அவர்களுடைய பாட்டி ஓர் அயர்லாந்துக் கத்தோலிக்கர். பாட்டியின் மகளான, சிறுமியின் தாய் புரட்டஸ்தாந்து மதத்தைசேர்ந்த ஒருவனை மணந்துகொண்டபின், ஒரு கோவிலுக்கும் செல்வதில்லை அவளின் பிள்ளைகளான அச்சிறுமியும் சகோதரும் புரட்டஸ்தாந்து கோவில்களுக்கு அனுப்பப்பட்டனர்.

பாட்டி அவர்களுடன் தங்கி இருக்கும் ஒவ்வொரு இரவும் நித்திரைக்குமுன் அமைதியாகவும் மெல்லிய தொனிலும் தன் செபங்களைச் சொல்லுவாள். நீண்ட நேரம் செபிக்கும் தன் பாட்டியின் செபங்களை மிகவும் கவனமாக அந்தச்சிறுமி கேட்டுக்கொண்டிருப்பாள். பாட்டி செபமாலை சொல்லுவாள். சிறுமி கவனமாக கேட்பதனால் பரமண்டல மந்திரம், பிரியதத்தமந்திரம் விசுவாசமந்திரம் வேறு சில செபங்களை அவள் கற்றுக்கொண்டாள். கத்தோலிக்க கோவிலுக்கு அவள் ஒரு நாளும் செல்லவில்லை. ஆனால், பாட்டியின் அற்புத வழக்கம் அவள் மனதை விட்டு அகலவில்லை.

அவள் பெரியவளானபின் மணம் முடித்தாள், ஒருகோவில்களுக்கும் செல்வதில்லை, சமயத்தைப்பற்றி அறிய வேண்டும் என ஆசை ஏற்பட்டதும் நூலகத்தில் இருந்து சில புரட்டஸ்தாந்து நூல்களை எடுத்துப் படித்தாள். சில வேளைகளில் இரவில் வீட்டில் அமைதி நிலவும் பொழுது அவளுக்கு பாட்டி தன் மெல்லிய குரலில் செபமாலை சொல்வது ஞாபகத்துக்குவரும். அந்த ஞாபகம் அவளிடத்தில் வளர்ந்து வந்தது. எனவே, பாட்டியின் ஞாபகத்தை அசட்டை செய்யமுடியாமல் கத்தோலிக்க புத்தகங்களை எடுத்துப்படித்தாள். அவளுடைய உள்ளத்தில் என்ன கேள்விகள் எழுந்தனவோ அவை யாவற்றிக்கும் கத்தோலிக்க புத்தகங்கள் விடையளித்தன. பின் அவள் ஒரு குருவைச் சந்தித்து—கத்தோலிக்க சமயத்தைப்பற்றி அவரிடம் கண்டு அறிந்து ஞானஸ்நானம் பெற்றாள். அவள் தன் கணவனுக்காகவும் தாய்க்காகவும் மன்றாடிவருவாள் (தந்தை இறந்துவிட்டார்) ஒரு வருடத்தின்பின் அவளது புருஷனும் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்துகொண்டான். அவளுடைய தாயும் மறுபடி கோவிலுக்கு கொண்டுவரப்பட்டாள். சில வருடங்களின்பின் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை ஞானஸ்நானம் பெற்றது. அவளுடைய மைத்துனியும் கணவனும் இவர்கள் புதிய சமயத்தில் சந்தோஷமாக இருப்பதைக் கண்டு தாமும் கத்தோலிக்கத்தைத் தழுவினர்.

இவை யாவும் நடந்ததற்கும் பாட்டியின் செபமாலையே காரணம்.

ரி. ஆர். மனோகரன்

(ஆதாரம்—CATHOLIC DIGEST)

---

● சென்ற 11 ஆம் திகதி ருஷியா வானவெளிக்கு அனுப்பிய "சொயுஸ் - 6" எனும் செயற்கைக் கிரகம் இப்பொழுது பூமியை வலம்வந்து கொண்டிருக்கிறது. இதிலே 34வயதுடைய ருஷிய விமானப்படை அதிகாரி கேணல் ஜோர்ஜ் ஷோனின், சிவில் எஞ்ஜினியர் டக்றர் வெலாறி குபாசவ் எனும் இருவருமே அதனைக் கொண்டுநடத்தும் வீரர்களாவர். வானவெளியில் ஆராய்ச்சி மேடையை நிறுவுதற்கென்று வேறுசில செயற்கைக் கிரகங்களையும் ருஷியா அனுப்பவிருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### ஐப்பசி — 1969

| | | | |
|---|---|---|---|
| 26 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 22-ம் ஞாயிறு (கிறிஸ்து இராசா) | [வெ] |
| 27 | திங்கள் | ஞாயிறு பூசை | [ப] |
| 28 | செவ்வாய் | புனித சைமன் அப்போஸ்தலர் புனித யூதா அப்போஸ்தலர். | [சி] |
| 29 | புதன் | ஞாயிறு பூசை | [ப] |
| 30 | வியாழன் | ,, | [ப] |
| 31 | வெள்ளி | ,, | [ப] |
| | | **கார்த்திகை** | |
| 1 | சனி | சகல புனிதர் | [வெ] |

# காவலன் கருத்து

## கிறிஸ்துவின் அரசு

"நீர் ஓர் இராசாவோ?" "ஆம்." பிலாத்து கேட்ட கேள்விக்கு நேரடியாக கிறிஸ்துநாதர் அளித்த மறுமொழி இது. கிறிஸ்துநாதர் பிறர் தம்மை கேள்வி கேட்ட போதெல்லாம் நேரடியான விடையை அளித்தவரல்லர். சில சமயங்களில் அவ்வாறு செய்தார். வேறு சில சமயங்களில் அவர்கள் வாயிலாகவே அவ்விடையைப் பெற்றுக்கொண்டார். இன்னும் சில சந்தர்ப்பங்களில் உவமைகள் மூலமே அவர்கள் கேள்விகளுக்கு விடை பகர்ந்தார். இந்த வேளையிலோ அவரது விடை சந்தேகத்துக்கிடமில்லாதபடி தெட்டத் தெளிவாக இருக்கிறது. ஆகவே தாம் ஓர் இராசா என்பதை அவர் வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, தச்சனின் குமாரனாக வாழ்ந்து, தமக்கென ஓர் இருப்பிடமின்றி நாடோடியாக வாழ்ந்த இவரை இராசா என்று அழைப்பது எங்ஙனம்? ஆனால், அன்று தன்னும் அதை யாரும் பொருத்தமற்றதாகக் கருதவில்லை. யூதர் அவர் தம் நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொடுத்திருந்தால், அல்லது அதைவிடச் சிறிய சகாயங்களுக்காகத் தன்னும் அவரை அரியணை ஏற்ற ஆயத்தமாயிருந்தனர். அவருடைய சீடர் கடைசி வரைக்கும் அவர் ஒரு புதிய யூதராச்சியத்தை ஸ்தாபிப்பார் என எதிர் பார்த்ததாகத் தோன்றுகிறது. ஆனால், உரோமச் சக்கரவர்த்தியின் பிரதிநிதியான பிலாத்து கிறிஸ்துநாதரின் கூற்றை பைத்தியகாரத்தனம் என்று பரிகசிக்காமல் துருவி ஆராய்ந்து கேட்பதற்கு வியப்பாக இருந்தாலும் ஏதோ ஒன்று அவர் கூறியது உண்மை என்பதை அவன் உள்ளுணர்விற்கு உணர்த்தியிருக்க வேண்டும். மதுபோதையிலிருந்த உரோமப் போர்வீரரின் செயல் யூதர்களின் மேலுள்ள துவேஷத்தினால் தூண்டப்பட்டதாயிருந்திருக்க வேண்டுமென நாம் ஊகிக்கலாம். ஆகவே அன்று கிறிஸ்துநாதர் தாம் அரசரென்று கூறியதை யாரும் மறுக்க முயலவில்லை. மறைக்கவே முயன்றனர்.

பிறந்த நாளில் யூதர்களின் இராசா எனப் பிறசாதியாருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கிறிஸ்து, தாம் மறைந்த நாளில் தமது அரசின் தன்மையை பிறசாதியினனாகிய பிலாத்துவுக்கு எடுத்துக் கூறுகிறார். தமது இராச்சியம் இவ்வுலகத்தைச் சார்ந்ததன்று என்பதையும் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதன்று என்பதையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கின்றார். இவ்வுலகைச் சார்ந்ததல்ல என்று கூறும்போது அதற்கும் இவ்வுலகிற்கும் தொடர்பில்லை என்பது அர்த்தமன்று. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவருடைய இராச்சியம் உலகில் நிறைவுபெறும்; ஆயினும் தேவனின் திருமக்கள் மத்தியில் அது ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. "உமது இராச்சியம் வருக" என்று செபிக்கும்போது அது பரவ வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். பரலோக பூலோக அரசராக வருகை தருவதற்குமுன் மக்கள் உள்ளமென்னும் இராச்சியத்தில் கிறிஸ்து அரசராக வீற்றிருக்கவும், தமது அன்பின் அரசை அவர்கள் மத்தியில் நிலவச் செய்யவும் ஆசிக்கிறார். உலக முடிவில் ஏற்படும் கிறிஸ்துநாதரது முடிவற்ற அரசுக்கு அது ஒரு முற்சுவையாக இருக்கிறது.

# அன்பின் அரசர்


—நாதன்

## அன்பின் அரசராம் கிறீஸ்து இராசாவை ஆன்ம அரசராகவும் இல்லங்களை ஆள்பவராகவும் ஏற்றுக்கொள்வோம்.

நமது ஆன்ம அரசராகிய கிறீஸ்து இராசாவின் திருநாளை ஐப்பசி மாதத்தில்வரும் கடைசி ஞாயிறு கொண்டாடும்படி திருச்சபை நம்மை ஏவுகிறது. வானுலகை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருக்கும் நாம், நம் வானுலக அரசனை, இம்மண்ணுலகில் தேவனாக மாத்திரம் அல்ல, அரசராகவும் ஏற்று, மரியாதை செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். இராசாதி இராசனாகிய அவர் இவ்வுலகின் அரசரல்ல. ஆனால், ஒவ்வோர் தனித்தனி ஆன்மாவினதும் அரசர். ஆன்ம அரசராய் நாம் அவரை வரவேற்கும்போது, இல்லங்களினதும், சமுதாயங்களினதும் அரசராய் இருக்கிறார்.

ஏசாயா தீர்க்கதரிசி, தாவீதரசர் முதலியோர் இவரது இராசரீகத்தைப்பற்றிக் கூறியவிடத்து, அவரது அரசுக்கு முடிவிராது என்று கூறுகிறார்கள். இவ்வுலக அரசுகள் முடிவடையும். விண்ணரசோ ஒருபோதும் முடிவடையாத பேரின்ப இராட்சியமாயிருக்கும். அதை உச்சித புரம் என்றும், புதிய ஜெருசலேம் என்றும் பக்தர்கள், புனிதர்கள் போற்றுகின்றனர். எனவே, அப்புதிய எருசலேமில் பங்கடைவதற்கு மக்களை யேசுநாதர், ஞானஸ்நான முத்திரைமூலம் பிரசைகளாக்கி, உறுதிபூசுதல் முத்திரைமூலம் தமது போர்வீரர் ஆக்குகிறார். அவரது போர்வீரர் சிலுவைக் கொடியின்கீழ் கிறீஸ்து இராசாவின் போர்க் கவசங்களாகிய பிரமாணிக்கம் என்னும் அரைக்கச்சையைத் தரித்து, இதய பரிசுத்ததனம் என்னும் மார்புக்கவசத்தை அணிந்து, விசுவாசம் என்னும் கேடயத்தைத்தாங்கி, தேவ வாக்கியம் என்னும் பட்டயத்தைக் கையிலேந்தி, எவ்வித கஷ்டம்வந்தபோதும் கிறீஸ்துவின் பிரசையை, போர்வீரனை அவர் கைவிட்டார் என்ற நம்பிக்கை என்ற தலைச்சீராவைத்தரித்து, அவரது நற்செய்தியை எங்கும் அறியச் செய்வதற்கு தைரியம் என்னும் பாதரட்சையை அணிந்து உலகம், சரீரம், பசாசு ஆகிய சத்துராதிகளை வென்று அவ்விண்ணரசைக் கிட்டிச் சேரவேண்டும் என்று பரி. சின்னப்பர், எபேசியருக்கு எழுதிய நிருபம் 6-ம் அதிகாரத்தில் முறைமையாக விளக்கியிருக்கிறார். ஆம், கிறீஸ்துவ போர்வீரரின் கடமை இதுவே.

கிறீஸ்துவின் போராயுதங்களைத் தாங்கியவன், போராடுவது மாத்திரமல்ல, கிறீஸ்துவின் நற்செய்தியை உலகுக்குப் பரப்பி, இறைவனுக்குச் சேவைசெய்வதையே நம் அன்பரசர் விரும்புகிறார். யார், யார் கிறீஸ்துவின் அரசுக்காகப் போராடுகிறார்களோ, யார், யார் விண்ணரசுக்கு ஆன்மாக்களைத் தயாரிக்கின்றார்களோ அவர்கள் தப்பாமல் விண்ணரசில் மகிமையடைவார்கள். அன்றியும் விண்ணரசில் ஆட்சியாளராகவும், கிறீஸ்துவால் தெரிந்துகொள்ளப்படுவார்கள்.



ஆகையால் கிறீஸ்து அரசரின் அன்புப் போராட்டம், நாடுகளையும், தேசங்களையும் வென்று ஆட்சிசெய்வதற்கல்ல, ஆன்மாக்களை ஆட்கொண்டு, இல்லங்களை ஆட்சிசெய்து, அறமுறையைக் கடைப்பிடித்து இல்லத்தின் அரசராகவும், வீட்டின் தலைவராகவும் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கின்றார், சுகத்திலும் துக்கத்திலும், சந்தோஷத்திலும், அழுகையிலும், வெற்றியிலும் தோல்வியிலும், தாமும் பங்குபற்ற விரும்புகிறார். புனிதை, மார்கரீத் மரியம்மாள்மூலம் தமது விருப்பை உலகுக்குத் தெரிவித்திருக்கிறார். விசேஷமாக, முதல்வியாழன் இரவு திருமணித்தியால ஆராதனை மூலமும், முதல்வெள்ளி திவ்விய பூசைப்பலி, நற்கருணை ஒன்றிப்பு மூலமும் நம்முடன் ஒன்றிக்க விரும்புகிறார். அவரது சிநேக ஊற்றாகிய இதயம், தாகங்கொண்ட ஆன்மாக்களின் ஜீவஊற்றாகி, அவர்கள் மூலம், மற்றும் ஆன்மாக்களுக்கும் பகிர்ந்தளிக்கும்படி கேட்கிறார். ஆகவே நம் அன்பினரசரின் பிரசைகளாகிய நாம், மேலும் மேலும் அவரை அறிவோம். அவரை நம் அரசராக ஏற்றுநேசிப்போம். அவருக்கு நம்மாலான சேவை புரிவோம். அவரின் சுவிசேஷத்தை உலகுக்கறிய வைப்பதே அவருக்கு நாம் செய்யும் சேவையாகும்.

## கன்னியர்களின் வைர யூபிலி விழா

திருக்குடும்பக் கன்னியர் குழுவினரின் முதுபெரும் கன்னியர்களான சகோதரி மேரி பேர்த்தா, சகோதரி வியாற்றிஸ் ஆதியோர் எதிரே வரும் ஞாயிறன்று கன்னியர் குழுவில் இணைந்த அறுபதாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றனர்.

இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் ஆசிரிய சேவையிலும் இறைபணியிலும் அறுபதாண்டுகள் செய்த சேவைகட்கு நன்றிசெலுத்து முகமாக அன்று காலை தோத்திரப் பலிபூசை மயிலிட்டியிலுள்ள வயோதிப கன்னியர்மடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இக்கன்னியர்கட்கு காவலன் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறுவதுடன் இறைவனின் நல்லாசியையும் இரந்துநிற்கின்றான்.

## கிறீஸ்தவர்களே! உங்கள் மகிமையை மதித்து நடவுங்கள்

— பரி; தந்தை

இம்மாதம் 1-ம்தேதி பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் வத்திக்கானில் அளித்த பகிரங்க பேட்டியில்கிறீஸ்தவர்களை தங்கள் உன்னத மகிமையை மதித்து நடக்குமாறு தூண்டியிருக்கிறார். பத்திரிகைகளிலோ, நாடகங்களிலோ, சினிமாப்படங்களிலோ நடைஉடை பாவனைகளிலோ கிறீஸ்தவர்கள் பிறருக்கு நன்மாதிரி உடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். யாருக்கு அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவரிடமிருந்தே அதிகம் எதிர்பார்க்கப் படுமெனக்கூறி, கிறீஸ்தவர்களுக்குத் தேவன் அருளிவரும் பெரும் கொடைகளைக்குறிப்பிட்டு அவற்றுக்காகத் தேவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ ஐப்பசிமீ 25 ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org